# இந்திய அரசு
# மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்
# தேசிய குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை

## 1. முகப்புரை

மகிழ்ச்சியான குழந்தை பருவம் மற்றும் வன்முறை, சுரண்டல், புறக்கணிப்பு, இழப்பு, பாகுபாடு போன்றவற்றில் இருந்து பாதுகாப்பான, கண்ணியமான வாழ்வு வாழ அனைத்து குழந்தைகளுக்கும் தகுதி உள்ளது. இந்தியா 472 மில்லியன் குழந்தைகளை கொண்ட இளமையான தேசம். நாற்பது சதவிகிதம் கொண்ட இந்த இளம் மக்கள் தொகையை பாதுகாப்பது என்பது மனித உரிமை தொடர்பான விசயம் மட்டும் அல்ல, ஒரு வலுவான தேசத்தை கட்டி எழுப்புவதற்கான மூலதனமும் ஆகும். உரிமைகளின் மீது குழந்தைகள் சம பங்கு உடையவர்களாகவும், அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலத்திற்கு உயரிய முக்கியத்துவம் வழங்கவும் இந்திய அரசியல் அமைப்பு அங்கீகரித்திருக்கிறது. குழந்தைகள் உரிமைக்கான ஐ.நா மாநாட்டில் இந்தியா கையெழுதிட்டு ஏற்றுக்கொண்டது. அதன்படி சிறார் நீதி(கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்–2015, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம்–2012, (PCPNDT) Act 1994, குழந்தை உரிமைக்கான பாதுகாப்பு ஆணைய சட்டம் – 2005, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை சட்டம்– 2009, குழந்தை திருமண தடை சட்டம்– 2006 போன்ற குழந்தைகளைப் பாதுகாக்கும் வலிமையான சட்டக் கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளது.

தற்போதய கொள்கையானது இந்திய அரசியல் அமைப்பு, பல்வேறு குழந்தைகளை மையமாக கொண்ட சட்டங்கள், சர்வதேசிய ஒப்பந்தங்கள் மற்றும் நடப்பிலுள்ள குழந்தைகளை பாதுகாக்கவும் நன்றாக இருப்பதற்கும் உள்ள கொள்கைகளிலிருந்து பல பாதுகாப்பு அம்சங்களை கொண்டுள்ளது. குழந்தைகளை தவறான முறையில் பயன்படுத்துவது, சுரண்டுவது, புறக்கணிப்பது ஆகியவற்றை தடுத்து ஆதரவு அளிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பான வழிகாட்டும் சுற்றுச்சூழலை வழங்குவதே இக்கொள்கையின் நோக்கம். இது அனைத்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் (பெருநிறுவனங்கள் மற்றும் ஊடக நிலையங்கள் உட்பட), அரசு மற்றும் தனியார் துறைகளை தனியாகவும் கூட்டாகவும் குழந்தைகளை பாதுகாத்தும், நல்வாழ்வை ஊக்குவிப்பதும் தொடர்பான தங்களது பொறுப்புகளை உணர செய்வதற்கான கட்டமைப்பை வழங்குகிறது.

## 2. பார்வை

இந்தியாவில் உள்ள அனைத்து குழந்தைகளும், எல்லா அமைப்புகளிலும், சூழ்நிலையிலும் பாதுகாப்பாக இருப்பது மற்றும் பாதுகாப்பாக உணர்வது.

## 3. அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கான வழிகாட்டுதல்கள் (ஊடகம் உட்பட)

- நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் குழந்தை பாதுகாப்பு கொள்கை பொருந்தும்.
- அனைத்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், குழந்தை பாதுகாப்பு கொள்கை மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சட்டங்கள், மற்றும் தேசிய வழிகாட்டுதல்களை முன் வைத்து, பணியாளர்களுக்கு நடத்தை விதிகளை உருவாக்க வேண்டும் மற்றும் சரியாக காட்சிப்படுத்த வேண்டும்.
- அனைத்து பணியாளர்கள்/ ஒப்பந்த பணியாளர்கள் குழந்தை பாதுகாப்பிற்கான அறிவிப்பில் கட்டாயம் கையெழுத்திட வேண்டும். மேலும் அவற்றை பின்பற்ற ஒப்புக்கொள்ள வேண்டும்.
- இது குழந்தைகளை தவறாக பயன்படுத்துதல் மற்றும் சுரண்டலை அணுவளவும் சகித்துக்கொள்ள முடியாத அனுமானங்களின் அடிப்படையில் அமைய வேண்டும்.
- பணியாளர்கள்/ ஒப்பந்த பணியாளர்களுக்கான நடத்தை விதிகள், குழந்தைகளை இனம், நிறம், பாலினம், பாலியல், மொழி, மதம், அரசியல் மற்றும் பிற அபிப்ராயங்கள், தேசியம், இனம் அல்லது சமூக தோற்றம், உடைமை, இயலாமை, பிறப்பு அல்லது பிற சமுதாய நிலை போன்ற பாகுபாடுகளின்றி, குழந்தைகளை புரிந்து கொண்டு மரியாதையோடு நடந்து கொள்ளும் வகையில் அமையவேண்டும்.

- எப்பொழுதும் குழந்தைகளின் கருத்துக்களைக் கேட்டு அதற்கு மரியாதை கொடுத்து கவனிக்க வேண்டும்.
- ஊழியர்களுக்கான நடத்தை விதிகளில் எப்பொழுதும் செய்ய கூடாதவை:
- மொழி அல்லது குழந்தைகளுக்கு எதிரான நடத்தைகளான தொந்தரவு, தவறாக பயன்படுத்துதல், பாலியல் ஆர்வத்தைத் தூண்டுகிற, ஒழுக்கக்கேடான அல்லது பண்பாட்டுக்கு பொருந்தாத செயல், உடல் ரீதியான பாலியல் ரீதியான உறவை குழந்தைகளிடம் வளர்த்தல் அல்லது தூண்டுதல் அல்லது ஆதரித்தல்.
- குழந்தைகளை சுரண்டுகிற அல்லது தவறாக பயன்படுவதற்கு நிகரான எந்த வகையான உறவுகள் அல்லது ஏற்பாடுகளை வளர்த்தல்.
- குழந்தைகளை தவறாக பயன்படுத்துவதற்கு அல்லது சுரண்டுவதற்கு அபாயம் உள்ள இடம், அல்லது அது தெரிந்தும், தகவல் தெரியப்படுத்தாமல் இருப்பது அல்லது தெரிந்தும், எதுவும் செய்யாமல் இருப்பது.
- குழந்தைகளை தவறாக பயன்படுத்துவது, சுரண்டுவது அல்லது புறக்கணிப்பது போன்வற்றை தடுப்பதற்கும், நடந்தால் வெளிப்படுத்துவதற்கும் குறிப்பிட்ட நபர் அல்லது நபர்களை, அனைத்து அமைப்புகளிலும் மற்றும் நிறுவங்களிலும் நியமித்து தகுந்த நடைமுறைகள் மற்றும் ஏற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டும்.
- குழந்தைகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் தொடர்பு எண் மற்றும் சைல்ட் லைன் 1098 ஆகியவற்றை தெளிவாக காட்சிப்படுத்த வேண்டும்.
- குழந்தைகளை பாதுகாப்பது தொடர்பான பல்வேறு சட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து, அனைத்து மட்டங்களிலும் எல்லா பணியாளர்களையும் (ஒப்பந்த பணியாளர்களையும்) உட்பட கட்டாயமாக பங்கேற்க செய்ய வேண்டும்.
- அமைப்பு மற்றும் நிறுவனங்களில் குழந்தைகளை தவறாக பயன்படுத்துவது அல்லது சுரண்டுவது அல்லது இந்த கொள்கையின் எந்த பகுதியையும் மீறும் எந்த ஒரு தனி நபரும் சட்டத்தால் தண்டிக்கப்படுவர்.
- உடல் ரீதியாக, இணையதளம் மூலம் குழந்தைகளை தவறாக பயன்படுத்துதல் உள்ளிட்ட பாலியல் ரீதியாக அல்லது உணர்வு ரீதியாக சீண்டுதல், குழந்தைகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தும் பொருட்களை விநியோகிப்பது, குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை கடத்தல், குழந்தைகளை கொடுமைப்படுத்துவது, பாலினம், சாதி, மதம், மொழி, இயலாமை மற்றும் பிற காரணங்களால் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடு, கைவிடுதல் அல்லது புறக்கணிப்பு போன்ற சம்பவங்களை சைல்ட் லைனுக்கோ (1098), காவல் துறைக்கோ அல்லது குழந்தை நல்வாழ்வுக் குழுவுக்கோ தெரியப்படுத்த வேண்டும். தகவல் தெரிவிப்பவரின் அடையாளம் பாதுகாக்கப்படும், வெளிப்படுத்தப்படமாட்டாது.
- உடனடியாகவும் மற்றும் தீவிர ஆபத்தில் உள்ள அவசர காலங்களில், மீட்பு நடவடிக்கைகளுக்கு தேவையான குழந்தைகளின் இருப்பிடம், சூழ்நிலை போன்ற தகவல்கள் சரியாக வழங்க வேண்டும்.
- ஒரு வேலை சரியான அதிகாரிகள் வருவதற்கு முன்னால், குழந்தைக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டால், உதவி செய்ய வேண்டும். ஆனால் சைல்ட் லைன் 1098 மற்றும் காவல் துறைக்கு சூழ்நிலை மற்றும் குழந்தையின் இடத்தையும் தெரியப்படுத்த வேண்டும்.
- எப்பொழுதும் சரியான அதிகாரி (சைல்ட் லைன் 1098 அல்லது குழந்தை நல்வாழ்வு குழு உறுப்பினர்கள்) நடவடிக்கை எடுக்கும் வரை காத்திருக்கவும் அல்லது அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளை கேட்டு செயல்பட வேண்டும்.
- தொழில் முறையில் குழந்தைகளுக்கு சேவை செய்வோர் (ஆசிரியர், ஆலோசகர் , மருத்துவர் பிற சுகாதார பணியாளர்கள் மற்றும் பிறர்), குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலனில் அக்கறையுடன் நடவடிக்கை எடுப்பதிலும், அறிவிப்புகளிலும் குழந்தை பாதுகாப்பு கொள்கைகளை பின்பற்ற வேண்டும்.
- குழந்தைகளுக்கான அக்கறை மற்றும் ஆதரவு சேவைகளான சைல்ட் லைன் 1098 சிறப்பு சிறார் காவல் அலகு (unit) குழந்தை நல்வாழ்வுக் குழுக்கள், ஒன் ஸ்டாப் சென்ட்டர்ஸ், போதை மறுவாழ்வு மையங்கள், மருத்துவமனை மற்றும் மன நல கவனிப்பு மையங்கள் மற்றும் குழந்தைகளுக்கு சேவை புரிவோர் பற்றி தெரிந்து இருக்க வேண்டும்.

- பெரு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள், எல்லா வகையிலும் குழந்தை தொழிலாளர்களை தடை செய்யும் கண்காணிப்பு முறைகளை ஏற்படுத்தி வலுப்படுத்திட வேண்டும்.
- நேரடியாக குழந்தைகளிடம் வேலை செய்யும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் அவர்களிடம் பணிபுரியும், அனைத்து பணியாளர்களையும் நிரந்தரமான அல்லது ஒப்பந்த பணியாளர்கள், தன்னார்வலர் மற்றும் குழந்தைகளிடம் தொடர்பு கொள்ளும் நபர்கள் அனைவரின் பின்னணியும் கடுமையாக சரிபார்க்கப்பட வேண்டும் (காவல் துறை சரி பார்ப்பு உட்பட).
- குழந்தைகளிடம் நேரடியாக வேலை செய்யும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் எல்லா பணியாளர்களுக்கும், குழந்தை உரிமைகள், போஸ்கோ சட்டத்தின் அம்சங்கள் 2012, சிறார் நீதி சட்டம் 2015, மற்றும் பிற குழந்தைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் உடல் ரீதியான தண்டனைகள், கொடுமைகள் மற்றும் அனைத்து வகை சீண்டலும் தடுக்கப்பட வேண்டும். குழந்தைகளை தவறாக பயன்படுத்துதல், சுரண்டல் அல்லது புறக்கணிப்பு போன்றவற்றை குறிக்கும் சைகை மற்றும் நடத்தைகள் பற்றி அனைத்து பணியாளர்களும் அறிந்திருக்க வேண்டும்.
- மருத்துவ நிறுவுதல்கள் (மருத்துவமனை மற்றும் கிளினிக்), மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் சிகிச்சை அளிக்க மறுக்கலாகாது. அல்லது பாலினம், பாலியல் நோக்கு நிலை, இயலாமை, சாதி, மதம், பழங்குடி, மொழி, திருமண நிலை, வேலை, அரசியல் கொள்கை அல்லது பிற அந்தஸ்து போன்ற எதை முன்னிட்டும் பாகுபாடு காட்டலாகாது. பாலியல் வன்முறை மற்றும் அமில வீச்சு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகளை மறுப்பவர்களுக்கு இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 166B உடன் பிரிவு 357 C பதிவு செய்ய முடியும்.
- குழந்தைகளிடம் நேரடியாக பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் வயதுக்கு தகுந்த விளக்க தொகுப்புகள் உருவாக்க வேண்டும். குழந்தைகளைத் தவறாக பயன்படுத்துதல், அவர்களுக்கு கிடைக்க கூடிய இணையதள பாதுகாப்பு மற்றும் சேவை போன்றவற்றிக்கு பயிற்சி குறிப்புகளை உருவாக்க வேண்டும்.
- குழந்தைகளை பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளும் அமைப்புகள் தகவல் சேகரிக்கையில் குழந்தைகளிடம் நேரடியாகவும் அல்லது பெற்றோர்கள்/ சமூகத்திடம் மறைமுகமாகவும் தகவல் சேகரிக்கையில் குழந்தைகளுக்கு தீங்கு மற்றும் அதிர்ச்சி ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்திட வேண்டும். ஆராய்ச்சி மேற்கொள்பவர்கள் நீதி நெறி மற்றும் குழந்தைகளை நட்புடன் அணுகும் வழிமுறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஐம்பது மற்றும் அதற்கு மேலுள்ள தினக்கூலி/ ஒப்பந்த பணியாளர்கள் உட்பட பணியாளர்களின் குழந்தைகளுக்கு குழந்தைகள் காப்பகம்/நகரும் காப்பகம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் தாய்மார்களுடன் உள்ள குழந்தைகளை கவனிப்பதற்கு சரியான இடமும், வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.
- பொது மக்கள் கையாளும் அனைத்து இடங்களிலும் குழந்தைகளுக்கு இணக்கமான மண்டலங்கள் கட்டாயம் உருவாக்க வேண்டும்
- கைக்குழந்தைகளை வைத்துக்கொள்ள தாய்மார்களுக்கு பாதுகாப்பான இடங்கள்.

*–மொழியாக்கம் : மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு*

*****

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு(HRF)**
*எண்:10/60, பாலாஜி நகர், முதல் பிரதான சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032*
*Phone: 86680 91451 I website : hrf.net.in I Skype : hrfchildrights I FB : HRFnet*